**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 129/2024 |
| Prosecution Witness | : | அ.சா.4 |
| Name | : | ரஞ்சனா |
| Father's / Husband Name | : | பழனிவேல் |
| Address | : | லாடபுரம் |
| Age | : | 45/2025 |

**தேதி : 01.04.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. எதிரி ஆஜர் இல்லை

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய கணவர் ஆவார். எங்களுக்கு சொந்தமாக TN 46 T 8732 என்ற Splender இருசக்கர வாகனம் உள்ளது. நானும், எனது கணவரும் லோன் வாங்குவதற்காக பெரம்பலூர் கிருஷ்ணா தியேட்டர் எதிர்புறம் உள்ள HDFC வங்கிக்கு கடந்த 18.06.2024 தேதி அன்று மதியம் 2.30 மணிக்கு சென்று வாகனத்தை மேற்படி வங்கிக்கு எதிர்புறம் நிறுத்திவிட்டு வங்கிக்கு சென்றுவிட்டு ஒரு அரை மணி நேரம் கழித்து வந்து பார்த்தபோது எங்களுடைய இருசக்கர வாகனத்தை காணவில்லை. அதன்பிறகு நாங்கள் பெரம்பலூர்முழுவதும் தேடிபார்த்தேன் கிடைக்கவில்லை, மற்ற இடங்களிலும் தேடிபார்த்தோம் கிடைக்கவில்லை. அன்றே காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம். ஆனால் போலீஸார் நன்றாக தேடிபார்த்துவிட்டு வந்து புகார் கொடுக்க சொன்னார்கள். அதன்பிறகு எனனுடைய கணவர் 09.07.2024 அன்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் புகார் கொத்தோம். புகார்

கொடுக்கும்போது நானும் உடன்சென்றிருந்தேன். போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

வண்டி காணாமல் போன அன்று நானும், எனது கணவரும் காவல் நிலையத்திற்கு சென்று கைப்பட புகாரை எழுதிக்கொடுத்தோம் என்றால் சரிதான். போலீஸார் விசாரித்தபோது விவசாய லோன் வாங்குவதற்காக வங்கிக்கு சென்றதாக சொன்னேன். எங்களுடைய இருசக்கர வாகனத்தை தேடிபார்த்தபோது அக்கம், பக்கத்தில் உள்ளவர்களை விசாரித்தபோது யார் எடுத்துச்சென்றார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை யார் எடுத்துசென்றார்கள் என்று நேரடியாக யாரும் பார்க்கவில்லை என்றால் சரிதான். HDFC மற்றும் அருகில் உள்ள கடைகளில் கண்காணிப்பு கேமரா ் பொறுத்தப்பட்டிருந்தது என்றால் சரிதான். கண்காணிப்பு கேமராவில் என்னுடைய இருசக்கர வாகனத்தை யார் எடுத்துசென்றார்கள் என்று பதிவாகவில்லை என்றால் சரிதான். வாகனத்தை யார் எடுத்துசென்றார்கள் என்று போலீஸார் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court read over / interpreted to the witness in the presence of the accused / accused/ pleader and admitted by the witness to be correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.